

# மஸ்ஜிட் இந்தியா நில அமிழ்வு விவகாரம்:

## முழு அறிக்கை

# அமைச்சரவையிடம் சமர்ப்பிக்கப்படும்

**கோலாலம்பூர், அக். 15-** கோலாலம்பூர் மஸ்ஜிட் இந்தியாவில் ஆகஸ்டு 23ஆம் தேதியன்று நிகழ்ந்த 8 மீட்டர் நில அமிழ்வு தொடர்பான முழு விசாரணை அறிக்கை பொதுமக்களுக்காக வெளியிடப்படுவதற்கு முன்பு அமைச்சரவையிடம் சமர்ப்பிக்கப்படும் என்று கூட்டரசு பிரதேச அமைச்சர் டாக்டர் ஜலீஹா முஸ்தாபா நேற்று தெரிவித்தார். பல்வேறு கண்டுபிடிப்புகள் அடங்கிய அந்த அறிக்கையை பல்வேறு முகமைகள் ஆராய்ந்து வருகின்றன. இந்த ஆய்வு இறுதிக் கட்டத்தில் உள்ளது என்று மக்களவையில் அவர் குறிப்பிட்டார்.

## மஸ்ஜிட் இந்தியா நில அமிழ்வு விவகாரம்...

ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் நில அமிழ்வு நிகழ்ந்த இடம், அதன் சுற்றுப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வந்த விசாரணையின் முடிவுகளை பல்வேறு முகமைகள் ஆய்வு செய்து வருகின்றன. டாங் வாங்கி போலீஸ் தலைவரும் கோலாலம்பூர் மாநகர் மன்ற அதிகாரிகளும் அப்பணிகளை ஒருங்கிணைத்து வருகின்றனர் என்று மக்களவையில் கேள்வி-பதில் நேரத்தின்போது டாக்டர் ஜலீஹா சொன்னார்.

நில அமிழ்வு தொடர்பான முழு விசாரணை அறிக்கையை வெளியிட அரசாங்கம் தயாராக இருக்கிறதா என்று பக்காத்தான் ஹராப்பானின் பத்து தொகுதி உறுப்பினர் பி. பிரபாகரன் கேட்ட துணைக் கேள்வியொன்றுக்கு பதிலளித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

எல்லா விதமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் ஜாலான் மஸ்ஜிட் இந்தியா இப்போது பாதுகாப்பான பகுதியாக உள்ளது என்றும் அவர் உறுதியளித்தார்.

ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் ஆகஸ்டு 23ஆம் தேதியன்று நிகழ்ந்த நில அமிழ்வில் நாற்பத்தெட்டு வயதான இந்திய சுற்றுப்பயணி விஜயலட்சுமி என்பவர் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.